நாதப் ப்ரம்மம் யுனைடெட் க்யான் அகாடமி சார்பில்

# எஸ்.ஆர்.கிருஷ்ணமூர்த்திக்கு 'நாத சேவகா' விருது

## உயர் நீதிமன்ற நீதிபதி வி.சிவஞானம் வழங்கினார்




சென்னை மயிலாப்பூரில் நேற்று நடைபெற்ற நாதப் ப்ரம்மம் யுனைடெட் க்யான் அகாடமியின் 22-ம் ஆண்டு தொடக்க விழாவில், இசைக் கலைஞர் எஸ்.ஆர்.கிருஷ்ணமூர்த்திக்கு 'நாத சேவகா' விருது வழங்கினார் உயர் நீதிமன்ற நீதிபதி வி.சிவஞானம். உடன், மாநில மனித உரிமைகள் ஆணையத் தலைவர் நீதிபதி எஸ்.பாஸ்கரன், அகாடமி நிறுவனர் என்.சுப்பிரமணியன். படம்: ம.பிரபு

**சென்னை**

நாதப் ப்ரம்மம் யுனைடெட் க்யான் அகாடமி சார்பில் சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், இசைக் கலைஞர் எஸ்.ஆர்.கிருஷ்ணமூர்த்திக்கு 'நாத சேவகா' விருதை நீதிபதி வி.சிவஞானம் வழங்கினார்.

அகாடமியின் 22-ம் ஆண்டு தொடக்க விழா மற்றும் சர்வதேச இசை, யோகா தினக் கொண்டாட்டம் மயிலாப்பூர் பி.எஸ். பள்ளி வளாகத்தில் நேற்று நடைபெற்றது. அகாடமி நிறுவனர் என். சுப்பிரமணியன் வரவேற்றார்.

இதில், இசைக் கலைஞர் எஸ்.ஆர்.கிருஷ்ணமூர்த்தியின் சேவையைப் பாராட்டி, அவருக்கு ரூ.10 ஆயிரம் தொகை மற்றும் பாராட்டுச் சான்று அடங்கிய 'நாத சேவகா' விருதை சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி வி.சிவஞானம் வழங்கினார். நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் பேசியதாவது:

**நீதிபதி வி.சிவஞானம்:** யோகமும், நாதமும் இறைவனை அடைவதற்கான வழி என்று வேதங்கள் கூறுகின்றன. இசையால் ஏராளமானோர் உயர்ந்துள்ளனர். இறைவன் அருளால்நாதத்தைப் பெற்று, அதை நாள்தோறும் பரப்பும் எஸ்.ஆர்.கிருஷ்ணமூர்த்திக்கு ஏற்கெனவே கலைமாமணி விருது வழங்கப்பட்டுள்ளது.

அவர் நீண்டகாலம் வாழ்ந்து, உலகெங்கும் இசையைப் பரப்ப வேண்டும்.

**தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத் தலைவர் நீதிபதி எஸ்.பாஸ்கரன்:** அறிவும், ஆன்மிகமும் எந்த அளவுக்கு மனிதர்களுக்கு அவசியமோ, அந்த அறிவையும், ஆன்மிகத்தையும் எடுத்துச் செல்ல கலையும் மிக அவசியம். அந்த வகையில், இறை ஞானத்தைப் பெற வழிகாட்டும் கலையார்வத்தை உருவாக்கும் கிருஷ்ணமூர்த்தியைப் பாராட்டுவது மகிழ்ச்சியளிக்கிறது.

**இசைக் கலைஞர் எஸ்.ஆர். கிருஷ்ணமூர்த்தி:** ஒரு சபை நிறைந்திருப்பதே, கலைஞர்களுக்கு முக்கியமானது. கலைஞனின் ஜீவனே, மக்கள் கூட்டத்தில்தான் இருக்கிறது. அவனுக்கு உற்சாகம் கிடைக்க வேண்டும். மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் முதல், நீதிபதிகள் வரை உடனமர்ந்து பேசியதற்கு இறைவனின் அருளே காரணம். இந்த விருதைப் பெறுவதில் மிகவும் பெருமையடைகிறேன். இவ்வாறு அவர்கள் பேசினர்.

நிகழ்வின் இறுதியில் எஸ்.ஆர். கிருஷ்ணமூர்த்தியின் இசைக் கச்சேரி நடைபெற்றது.

Hindu Tamil 22.6.23

...பட்டுள்ளன. நாட்டின் வளர்ச்
...களும் விவரிக்கப்பட்டுள்ளன.
...டு பயணங்களால்
...சியை விரித்துரைக்கும் நூல்.

– புலவர் சு.மதியழகன்

முன்னுதாரணமாகக் கூறி, வாசிப்போர் மனதில் நம்பிக்கையை ஊட்டுகிறது. மாணவ – மாணவியர், பெற்றோர், ஆசிரியர்கள் வாசிக்க வேண்டிய நூல்.

– டி.எஸ்.ராயன்




■ 'நாத பிரம்மம் யுனைடெட் கியான் அகாடமி' சார்பில், நாத பிரம்மத்தின் 22ம் ஆண்டு துவக்க விழா மற்றும் உலக இசை, யோகா தினம் நேற்று கொண்டாடப்பட்டது. இதில், இசைக் கலைஞர் கிருஷ்ணமூர்த்திக்கு 'நாத சேவகா' விருதை, சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி சிவஞானம் வழங்கினார். உடன், இடமிருந்து வலம்: அகாடமி நிறுவனர் சுப்பிரமணியன், மாநில மனித உரிமை ஆணைய தலைவர் நீதிபதி பாஸ்கரன். இடம்: மயிலாப்பூர்.

# Naadha Sevaka Award given to vocalist S.R. Krishnamurthy

The Hindu 22.6 23

**The Hindu Bureau**
CHENNAI



S.R. Krishnamurthy receiving the Naadha Sevaka Award on Wednesday. R. RAVINDRAN

Madras High Court Judge V. Sivagnanam on Wednesday presented the Naadha Sevaka Award to Carnatic vocalist S.R. Krishnamurthy on behalf of Naadhabrahmam United Gyan Academy. Apart from being an A-Grade artist of All India Radio, Mr. Krishnamurthy, who was born without limbs, is an artist, linguist and motivational speaker and has a postgraduate degree to his credit.

Speaking on the occasion, Justice Sivagnanam said the 75-year-old Coimbatore-based musician had been bestowed the gift of music. He said just seeing Mr. Krishnamurthy was enough to motivate others.

S. Baskaran, Chairperson, State Human Rights Commission, said he was happy to see a great musician being honoured for his contribution to Carnatic classical music.

The event was followed by a concert by Mr. Krishnamurthy. He was accompanied by D. Badrinarayanan on the violin and Manikudi S. Chandrasekaran on the mridangam.